IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 38/2021 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | A.சந்திரசேகரன் | CASTE | : | |
| S/O. | அழகர்சாமி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | நீரோத்தன் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 58 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.03.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனது தாத்தா ரங்கசாமி,அவருடன் பிறந்தவர்கள் இரண்டு பேர்,அவருடைய பேர் வாலகுருவாரெட்டியார் மற்றும் நாகுரெட்டியார். வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியும். சாட்சியளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை, வாதி எனது உறவினர் என்பதால் வந்தேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்தை தவிர மற்ற அனைத்து இடத்தையும் வாதியின் முன்னோர்கள் கிரையம் பெற்று அனுபவம் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் தற்போதைய நிலைப்பற்றி எனக்கு தெரியும். இந்த வழக்கு சொத்தின் பின்புறம் செருப்பு கடை உள்ளது, அந்த இடம் ரமேஷ் என்பவர் கிரையம் பெற்ற இடம். வழக்கு சொத்தை எனது அப்பா சீனிவாசன் என்பவருக்கு விற்றார்.

3. எனது தாத்தாவிற்கு தென்வடல் 33 அடி, கிழமேல் 5 அடி இடம் பாத்தியப்பட்டது. மேற்படி இடம் காலியிடமாக தான் இருந்தது. எனது அப்பாவிற்கு மேற்படி இடத்தில் மூன்றில் ஒரு பங்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.4 ல் எனது அப்பா கிரையம் கொடுத்த பத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு,55 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதை தவிர சீனிவாசனுக்கு வேறு எந்த சொத்தும் கிரையம் கொடுக்கவில்லை. மேற்படி கிரையப்பத்திரத்தில் 30 சதுரடி வீடு என்று எந்த சொத்தை காட்டப்பட்டது என்றால் ஞாபகமில்லை.

4. வா.சா.ஆ.4 பத்திரத்தில் உள்ள சங்கதிகளின் படி அந்த சொத்தில் வீடு இருந்தது என்றால் சரிதான். எனது அப்பா அவரது பாகத்தை காட்டிலும் கூடுதலான இடத்தை மேற்படி பத்திரத்தின் படி விற்பனை செய்து உள்ளார் என்றால் சரியல்ல.

முத்துரெட்டியருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் மற்றும் ஒரு பெண் பிள்ளை. அவர்கள் பெயர்கள் சீனிவாசன், குருநாதன் மற்றும் லெட்சுமியம்மாள். குருநாதன் வழக்கு சொத்தில் பெட்டிக்கடை வைத்து உள்ளார். பிரதிவாதி சுந்தரராஜன் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும்.

5. எனது அப்பா விற்பனை செய்யவதற்கு முன்பே பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு முன்பே அந்த இடத்தில் சப்பாணி என்ற இராமசந்திரன் புரோட்டா கடை வைத்து இருந்தார். எனது தாத்தாகளுக்கு இடையே எமுத்து பூர்வமாக பாகம் பிரிக்கவில்லை, வாய்மொழியாக தான் பாகம் பிரித்தார்கள். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாகம் பிரித்து கொண்டதாக அடி கணக்கு சொல்லப்பட்டவை எமுத்து பூர்வமாக இல்லை. எனது தாத்தாகளின் ஒருவெருக்கும் 5 அடிகளாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான், ஒன்றை அடி பொதுவில்விட்டார்கள்.

6. பொதுவாக இடம் ஏதும் விடவில்லை வாதி எனது உறவினர் என்றால் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த இடம் ஆதியில் தர்ம சத்திரமாக பயன்படுத்தினார்கள். மொத்த இடம் இரண்டு செண்டு என்றால் சரியில்லை. வா.சா.ஆ. 2 பத்திரத்தில் சர்வே எண். 13/7B ல் இரண்டு செண்டு இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே 13/7B என்பது வழக்கு சொத்துக்கு சம்மந்தமில்லாத வேறு சொத்து.

7. பிரதிவாதி அவர் கிரையம் வாங்கிய சொத்தை விற்பனை செய்யதவர் அனுபவம் செய்தது போலவே தான் அனுபவம் செய்கிறார், ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.